**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**அசல் வழக்கு எண்.96/2024**

**வா.சா.1**

நாள்: **28.01.2026**

2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேக் நபி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இந்த வழக்கின் வாதி. எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

17.04.2024ம் தேதியிட்ட ரூ.23,00,000த்திற்கான அடமானக்கடன் பத்திரம் போதிய முத்திரைத்தாள்களில் எழுதப்படவில்லை என்றும், அது பதிவுசெய்யப்படவில்லை என்றும், அதனால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய முடியாது என்றும், அதனை impound செய்ய வேண்டும் என்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்திற்கான முத்திரைத்தாள் தொகை மற்றும் தண்டத்தொகை செலுத்துவதற்கு தயாராக உள்ளதாக தெரிவித்தார். எனவே மேற்படி ரூ.23,00,000/-த்திற்கான அடமானக்கடன் பத்திரத்திற்கான போதிய



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.28 13:08:28 +0530

முத்திரைத்தாள் தொகை மற்றும் 10 மடங்கு தண்டத்தொகை செலுத்தினால் மட்டுமே மேற்படி ஆவணம் குறியீடு செய்ய முடியும் என்று இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படி குறைவு முத்திரைத்தொகை மற்றும் தண்டத்தொகை செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்படுகிறது.

<u>ஆவணங்கள்</u>

| **வ.எண்** | **தேதி** | **ஆவணங்கள்** | **Description** | **Remarks** |
|---|---|---|---|---|
| 1) | 31.08.2024 | வா.சா.ஆ.1 | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் | வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 2) | 03.07.2024 | வா.சா.ஆ.2 | பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 3) | 03.07.2024 | வா.சா.ஆ.3 | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை பதிவு தபால் மூலம் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது | அசல் |
| 4) | 08.07.2024 | வா.சா.ஆ.4 | மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| 5) | -- | வா.சா.ஆ.5 | எனது ஆதார் அடையாள அட்டை | ஜெராக்ஸ் நகல் |

மேற்படி அடமானக்கடன் பத்திரத்திற்கான குறைவு முத்திரைக்கட்டணம் மற்றும் தண்டத்தொகை செலுத்துவதற்காக முதன்மை விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.28 13:08:33 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .